**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 25/2017**

**வாதி தரப்பு சாட்சி-1 தனலெட்சுமி - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 01.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

1) வா.சா.ஆ.2 ல் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படிக்க தெரியாது. படிக்க சொல்லி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் என்ன கண்டுள்ளது என தெரியாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் சர்வே எண் 710/4 என்னுடையது, சர்வே எண் 710/5 ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். வா.சா.ஆ.2 ல் நல்லபெருமாளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என கண்டு எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லை விபரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்குபுறம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ராமசாமி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்குபுறம் அய்யாகண்ணு நிலம்.

2) தெற்குபுறம் காலியிடம். வா.சா.ஆ.2 ல் உள்ள நான்கு எல்லையில், வா.சா.ஆ.1 ல் உள்ள நான்கு எல்லையும் ஒன்றா என்றால் ஒன்றுதான். எனது சொத்தில் கிழுபுறம் உள்ள நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. நல்லபெருமாளின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. நல்லபெருமாளின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் சரியல்ல, சகோதரர் பெயர்தான் ராமசாமி. தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளதை காட்ட வா.சா.ஆ.1 பட்டாவைத் தவிர வேறு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 உத்தேச பட்டா என்றும், நத்தம் பட்டா அல்ல என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றி உள்ள இடங்கள் அனைத்தும் வீட்டுமனைகள் தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் சர்வே எண் 710/4 காலிமனை என கண்டுள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.11 உத்தரவானது 04.03.2024 ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ன் படி நல்லபெருமாளுக்கு சொத்து பாத்தியம் என கண்டுள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 710/4 க்கு மேற்குபுறம் உள்ள நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. ராமசாமி உடையார் நிலத்திற்கு மேற்குபுறம்

தெய்வசகாயஉடையார் நிலம் உள்ளதா என்றால் ஆமாம். தெய்வசகாயஉடையார் நிலத்தில் அவர் ஒரு பகுதியும், பாலசுப்பிரமணி என்பவர் மற்றொரு பகுதியிலும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லை எதன் அடிப்படையில் போட்டுள்ளோம் என்றால் வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ளபடி போட்டுள்ளோம். வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்துக்களுக்கும், எனக்கும் எந்த பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்தை நல்லபெருமாள் 28.11.1958 ல் கிரையமாக பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான பதிவு செய்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) தாவா சொத்து நல்லபெருமாளுக்கு பாத்தியப்பட்டு, வா.சா.ஆ.2 ன் படி இளையராணிக்கு செட்டில்மென்ட் செய்து கொடுத்து, தற்போது 2ம் பிரதிவாதி இளையராணியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பிரதிவாதிகளின் உரிமைய கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய உரிமை ஆவணங்களை எதையும் நான் தாக்கல் செய்யாத நிலையில், வா.சா.ஆ.2 ஆவணத்தில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிய பின்னிட்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே நிலத்தில் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தான் வீடுகட்ட சென்றபோது பிரதிவாதிகள் தங்கள் நிலத்தை எழுதிக்கொண்டதாக சொன்னார்கள். அப்போதுதான் வா.சா.ஆ.2 ஆவணம் பற்றி எங்களுக்கு தெரியும்.

5) நான் வீடுகட்ட சென்றபோது பிரதிவாதிகள் பிரச்சினை செய்ததாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு எவ்வித அனுபவமும் இல்லை என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்துக்கொண்டு நான் தவறான முறையில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**